# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 42/மா/2023**
**நாள் : 02.03.2023**

திரு. S. சுரேஷ்,
சென்னை – 600 081. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, குமரன் நகர், முதல் தெரு, எண்.14 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சுரேஷ் என்பவரின் 7.02.2023 நாளிட்ட மனு 08.02.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 42/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, குமரன் நகர், முதல் தெரு, எண்.14 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சுரேஷ் தனது முறையீட்டு மனுவில்,

“நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக் கொண்டு சமூக ஆர்வலராகவும் சேவையாற்றி வருகிறேன். சென்னை, தண்டையார் பேட்டை பகுதி மண்டலம்-IVக்கு உட்பட்ட வார்டு எண்.38, 41 மற்றும் 47 ஆகிய பகுதிகளில் சமீப காலமாக தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஊழியர்கள் சிலர் முறையான சட்ட அனுமதியின்றி மின் ஒயர்களை (cable wire) அமைப்பதற்காக ஒவ்வொரு தெருவிலும் பள்ளம் தோண்டி சாலையை சேதப்படுத்தி உயர் இரும்பு கம்பங்கள் (pole) பதித்து பயன்படுத்தி வருகின்றனர்.

2. மேற்கண்ட செயல்களை செய்யும்போது இடர்ப்படும் மரங்களையும் அனுமதி பெறாமல் வெட்டி விடுகின்றனர். ஒயர்களை மாநகராட்சி மின்கம்பங்கள், மரங்களில் கட்டி விடுகின்றனர். வீடுகள் மீதும் எடுத்து செல்கின்றனர். இவ்வாறு அதிக அளவில் கேபிள் ஒயர்கள் சாலையில் தொங்கியபடி இருப்பதால் பொது போக்குவரத்திற்கும் ஆபத்தாக உள்ளது. இவர்கள் சில இடங்களில் அனுமதி பெற்று இருந்தாலும் அதை வைத்து அனுமதி பெறாத பல இடங்களில் சட்ட விரோதமாக நூற்றுக்கணக்கான உயர் இரும்பு கம்பங்களை பதித்து விடுகின்றனர். பெரும்பாலும்

இரவில் பொது மக்கள் உறங்கும் நேரத்தில் இந்த வேலைகளை செய்வதால் உரிய கண்காணிப்பிலிருந்து தப்பி விடுகின்றனர். இந்த விதி மீறலை எங்களை போன்றவர்கள் கேள்வி எழுப்பினால் இவர்கள் தொகுதி MLAவிடம் அனுமதி பெற்றுள்ளோம், பகுதி கவுன்சிலரிடம் சொல்லிவிட்டோம் என அரசியல்வாதிகள் பெயரை சொல்லி மிரட்டல் விடுகின்றனர்.

3. மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் செயல்கள் மூலம் பொது சாலைகள் சேதமாவதுடன் பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. மேலும் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு கிடைக்க வேண்டிய வருமானமும் கிடைக்காமல் இழப்பு ஏற்படுகிறது. இது தொடர்பாக பலமுறை நான் சம்பந்தப்பட்ட மாநகராட்சிக்கு அதிகாரிகளுக்கு நேரிலும் தபால் மூலமும் புகார் அளித்தாலும் அவர்கள் அரசியல்வாதிகளுக்கு பயந்தோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இதன் மீது நடவடிக்கைகள் எடுக்காமல் இருகின்றனர்.

4. மேற்கண்ட புகார் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டி நான் கடந்த 09.01.2023 அன்று மண்டல அலுவலரை நேரில் சந்தித்து எழுத்துப்பூர்வமான புகார் மனு அளித்துள்ளேன். மேலும் வார்டு AE, JE, ஆகியோர்களையும் ஒவ்வொரு முறையும் நேரில் பார்த்து புகார் அளித்துள்ளேன். இருப்பினும் தற்போது வரை மேற்கண்ட புகார் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே உயர்திரு ஐயா அவர்கள் எனது இந்த பொது நலன் சார்ந்த புகாரினை விரைவில் விசாரணை செய்து உரிய அனுமதியில்லாமல் மற்றும் அனுமதி அளிக்கப்பட்ட இடங்களை தாண்டி சாலையில் பள்ளம் தோண்டி விதிகளை மீறி மின் ஒயர்களை (cable wire) அமைக்க சட்ட விரோதமாக உயர் இரும்பு கம்பங்கள் (pole) அமைந்து வரும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும், ஏற்கனவே அமைக்கப்பட்ட சட்ட விரோத உயர் இரும்பு கம்பங்களை கள ஆய்வு செய்து அப்புறப்படுத்த வேண்டுமென்றும், இந்த செயல்களை செய்த நபர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த நபர்கள் மீது காவல்துறை மூலம் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று உரிய அதிகாரிகளுக்கு தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 27.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 23.2.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 27.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

சென்னை தண்டையார்பேட்டை வார்டு எண்கள் 38, 41 மற்றும் 47 ஆகிய பகுதிகளில் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சட்ட அனுமதியின்றி மின் ஒயர்களை (Cable wire) அமைப்பதற்காக அங்குள்ள தெருக்களில் பள்ளம் தோண்டி சாலையை சேதப்படுத்தி இரும்புக் கம்பங்களை (Pole) பதித்து வருகின்றனர். இதனால் மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்று சட்ட விரோதமாக தெருக்களில் பள்ளம் தோண்டி கம்பங்களை நடுவது குறித்து மாநகராட்சி அலுவலர்களிடமும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளிடமும் மனு அளித்தும், இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

எனவே அனுமதியில்லாமல் சாலையில் பள்ளம் தோண்டி விதிகளை மீறி மின் ஒயர்களை அமைத்து வரும் நபர்கள் மீது சட்டப்படியான நடிவடிக்கை எடுத்திடவும், அனுமதியில்லாமல் சட்ட விரோதமாக நடப்பட்டுள்ள இரும்புக் கம்பங்களை அப்புறப்படுத்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ன் உதவி பொறியாளர் 27.02.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"மனுதாரர் தெரிவித்துள்ள சென்னை தண்டையார்பேட்டை வார்டு எண்கள் 38, 41 மற்றும் 47 ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களில் தனியார் நிறுவனம் மின் ஒயர்களை (Cable Wire) அமைப்பதற்கு பள்ளம் தோண்டி இரும்புக் கம்பங்கள் ( Pole) பதிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சாலையில் பள்ளம் தோண்டி இரும்புக் கம்பங்கள் ஊன்றிட பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், இதற்கான கட்டணமும் மேற்கண்ட தனியார் நிறுவனத்திடமிருந்து முறையாக வசூலிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து, அதன் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 4ன் உதவி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் சென்னை தண்டையார்பேட்டை, மண்டலம்-4க்கு உட்பட்ட வார்டு எண்.38,41, மற்றும் 47 ஆகிய பகுதிகளில், தனியார் நிறுவனங்கள், Cable Wire இணைப்பதற்கு சில இடங்களுக்கு மட்டும் அனுமதி வாங்கிவிட்டு, அனுமதியில்லாமல் எல்லா பகுதிகளிலும் பள்ளம் தோண்டி, ஆபத்தான முறையில் இரும்பு கம்பிகளை ஊன்றி மக்களுக்கு இடையூறு செய்வதாகவும், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

2. மனுதாரர் குறிப்பிட்டவாறு Cable wireகள் பல இடங்களில் முறையற்ற முறையில் இரும்பு கம்பங்களின் வழியாக இணைப்புகள் கொடுத்துள்ளதை மனுதாரரின் வாக்குமூலமும், புகைப்படத்தின் வாயிலாகவும் தெரியவருகிறது.

மனுதாரரின் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பள்ளம் தோண்டி இரும்பு கம்பங்கள் ஊன்றிட பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும், அதற்கான உரிய கட்டணங்கள் தனியார் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4ன் உதவி பொறியாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் Cable wire அமைப்பது, அதற்கான அனுமதி அளிப்பது, கட்டணங்கள் நிர்ணயம் செய்வது மற்றும் செயலாக்க முறைகள் குறித்து தகவல் தொழில் நுட்பவியல் துறை, அரசாணை (நிலை) எண்.6, தகவல் தொழில் நுட்பவியல்துறை நாள்: 25.1.2023ல் ஆணையிட்டுள்ளது: அதில் குறிப்பாக :-

(10) To The summary of features / provisions of the Policy are stated below (refer to the policy document for exact provisions)

The Principal Scretary to Government, information Technology Department shall function as Dispute Resolution Officer, under the provisions of Indian Telegraph Right of Way Rules, 2016.

Appropriate Authority is the State Government, local authority of such authority, body, company or institution incorporated or established by the State Government, in respect of property, under, over, along, across, in or upon which Underground or Overground Telegraph infrastructure, is to be established or maintained, vested in, or under the control or management of such Appropriate Authority.

Nodal Officer is the officer designated by every Appropriate Authority including local bodies for processing the application under this policy and sending the recommendations to the District Nodal Officer.

In respect of Greater Chennai Corporation, the Commissioner of Corporation and in respect of Districts other than Chennai, the District Collectors shall be the District Nodal Officers and shall be solely empowered to issue the permission in their respective jurisdictions under this policy based on recommendations of the Nodal Officers under the geographical jurisdiction of the District Nodal Officer.

Charges / fee to be levied for giving RoW permission have been fixed as follows:

For laying Underground Telegraph Infrastructure, every application under sub-section of (1) of Section 7 of this Policy shall be accompanied by a non-refundable fee of Rs.1000/- per Kilometre or part thereof exclusive of taxes.

For establishing Mobile Tower (Over ground Telegraph Infrastructure), every application under sub-section of (1) of Section 11 of this Policy, shall be accompanied by a one-time non-refundable fee Rs.10,000/- per Tower.

For establishing Overground Telegraph / Optical Fibre Cable line, every application under sub-section of (1) of Section 11 of this Policy, shall be accompanied by a one-time non-refundable fee of Rs.1000/- per kilometer or part thereof exclusive of taxes.

- In case of each Wi-Fi antenna or Micro Cell unit with utility box attached to Micro Cell installed on any public land or building including Bus, Shelters, Light Pole, Public Places or other Government premises and Cell-on-Wheels (CoW), a one-time fee of Rs.1000/- exclusive of taxes per installation shall be payable.

- No fee and charges shall be recovered from the Government Departments for establishing Telecommunication System including towers / Poles for their use.

- In line with the Indian Telegraph Right of Way Rules, 2016, no track rent (one-time or annually) shall be charged by any District Nodal Officer or Appropriate Authority for grant of any permission under any existing Government Orders

issued by Revenue & Disaster Management, Rural Development & Panchayat Raj and Municipal Administration & Water Supply departments.

**<u>Ensuring Public Convenience/safety and Inspections :</u>**

- It shall be ensured that prior to the commencement of work, measures to mitigate public inconvenance and provisions for public safety are implemented in consonance with various State/Central Acts/Rules.

- The Appropriate Authority shall have the right to inspect the site at all times without any prior notice to supervise the execution of work to ascertain if the conditions imposed in the grant of permission is being complied with by the applicant.

**<u>Regularisation of existing telecom infrastructure:</u>**

- Wherever permissions have already been granted or was deemed to be granted under erstwhile orders, the same shall hold good and no fresh permission will be required under this policy.

- However all the existing Telegraph infrastructure wherein either formal permission has not been issued or deemed to be granted, shall be regularised upon the submission of application in Form-I and / or Form II as annexed to this policy along with information and documents as specified therein and after the payment of prescribed fee under this policy. Such application shall be submitted within six months of issue of this policy, after which the said Mobile Towers / Cable or OFC (underground/overground) shall be deemed as unauthorized.

**<u>இந்நிகழ்வில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி பொறியாளர் அளித்துள்ள ஆவணங்களை நோக்குங்கால், Cable Wire அமைப்பது, மற்றும் அனுமதி அளிப்பது மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் வரக்கூடிய ஓர் நிதி ஆதாரமாக (Source) உள்ளது. எனவே, மனுதாரர் குறிப்பிட்ட பொருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4, வார்டு 38, 41, 47ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல், Cable Wire இணைப்புகள் ஏதும் அமைக்கப்பட்டிருந்தால், அவற்றை கண்டறிந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பை தடுக்கும் விதமாக, உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பிற மண்டலங்களில் அனுமதியில்லாமல், Cable Wire இணைப்புகள் ஏதும் அமைக்கப்பட்டிருந்தால் கள பணியாளர்கள் மூலம் ஆய்வு செய்து அவற்றின் மீது உரிய சட்டப் பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாயை அதிகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் தனியார் நிறுவனங்கள் Cable Wire அமைக்கும் போது மேலே குறிப்பிட்டுள்ள அரசாணையில் உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்கிறார்களா என்பதை உறுதி

செய்துகொள்ளும்படியும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. சுரேஷ்,
எண்.14, முதல் தெரு, குமரன் நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) துணை ஆணையர் (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.

5) துணை ஆணையர்,
மண்டலம் - 4, பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்